துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

...முதல் பக்கத் தொடர்ச்சி

பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

கோபாலபுரம் - சி.ஐ.டி. காலனி இல்லங்களில் வாழ்த்து!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்று முத்தமிழறிஞரின் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து சி.ஐ.டி. காலனி இல்லத்திற்குச் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி வணங்கியதைத் தொடர்ந்து திருமதி ராசாத்தி அம்மையாரிடம் வாழ்த்துப் பெற்றார்.

குறிஞ்சி இல்லத்தில் கழகத்தினர் வாழ்த்து!

துணை முதல்வர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று (27.11.2024) குறிஞ்சி இல்லமே எழுச்சியுடன் எழிலார்ந்த முறையில் அமைக்கப்பட்டு இருந்தது. நேற்று காலை 7 மணி முதலே குறிஞ்சி இல்லத்தை நோக்கி கழகத்தினர் பொது மக்கள் குவிந்த வண்ணமிருந்தனர்.

நேரம் செல்லச் செல்ல குறிஞ்சி இல்லத்தைச் சுற்றியுள்ள சாலைகள் முழுவதும் கழகத்தினர், பொது மக்களின் தலைகளாக காட்சி அளித்தன.

அங்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற, முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், தோழர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், பேராசிரியர்கள், திரையுலகப் பிரமுகர்கள் என்று பல்வேறு தரப்பினரும் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து புத்தகங்கள், மலர்க் கொத்து, சால்வை என்று தங்களுக்கு விருப்பமானப் பொருட்களை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தனர்.

நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

தனது பிறந்த தினத்தை முன்னிட்டு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் நினைவிடங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதே போன்று வேப்பேரியில் தந்தை பெரியார் நினைவிடத்திலும் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்போது அங்கு குழுமியிருந்தோர் உதய நிதி ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

தமிழ்நாடு முழுவதும் விழா!

தமிழ்நாடு முழுவதும் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி கழகத்தினர் கழகக் கொடி ஏற்றி ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடினர்.

அந்துமணி சிந்துமணி

அந்துமணி : ஏண்டி சிந்து; அ.தி.மு.க. உட்கட்சிக் கள ஆய்வில் அடிதடி, முட்டல் மோதல், சலசலப்பு நடப்பதைப் பற்றி, 'ஜனநாயகம் இருப்பதால் அடிச்சுக்கிறாங்க' என்று அ.தி.மு.க. உதயகுமார் சொல்லி இருக்கிறாரே ?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; இந்த அடிதடி ஜனநாயகம், அ.தி.மு.க.வின் 'புரட்சி' ஜனநாயகம் அல்லவோ !

உயர் கல்வி, தொழில் உற்பத்தி, தொழில் முன்னேற்றத்தில் உலக நாடுகளுக்கு இணையாக

தமிழ்நாடு மாணவர்கள் எட்ட வேண்டுமென முதல்வர் புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்!

மதுரை மாவட்ட உயர்கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!

மதுரை, நவ. 28 -

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (26.11.2024) மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் உயர் கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:

"மக்களிடம் செல், மக்களோடு வாழ், மக்களிடமிருந்து கற்றுக்கொள்" என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறையின் திட்டங்கள் முறையாகச் செயல் படுத்தப்பட்டு மாணவர்களின் கல்வித் திறனை மேலும் மேன்மை அடையச் செய்திடும் வழியில் உயர்கல்வித் துறை பங்களிப்பாளர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் கருத்தினைப் பெற்றுச் செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, உயர்கல்வித் துறை பங்களிப்போர் கூட்டம் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நடத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டத்தின் மூன்றாவது கூட்டம் இன்றைய தினம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

உயர் கல்வித் தரத்தினை மேம்படுத்த திட்டம்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உயர்கல்வித் துறையையும், மருத்துவத் துறையையும் தனது இரு கண்களாகக் கருதி இத்துறைகளின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார். அதன்படி, உயர்கல்வித்துறையினை மேலும் மேம்படுத்திட உயர்கல்வித் துறை அரசு அலுவலர்களுடன் உயர் கல்வித்துறையின் பங்களிப்போர் அனைவரையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடி கருத்துகளைப் பெற இங்கு வந்துள்ளோம். இதன்மூலம் தாங்கள் வழங்கும் அரிய கருத்துகளைத் திரட்டித் தொகுத்து உயர்கல்வியின் தரத்தினை மேலும் மேம்படுத்திடக் கருதியுள்ளோம். 7.5 சதவீத இட ஒதுக்கீடு என்பது நீட் தேர்வினால் நமது கிராமப்புற மாணவர்கள் தங்களது உயர் கல்வியினைப் பெற இயலாத நிலையைக் கருத்தில் கொண்டு முந்தைய அரசால் மருத்துவ மாணவர்களுக்கு மட்டும் 7.5 சதவீத இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது. இதனால் இட ஒதுக்கீடு பெற்ற ஒரு மாணவி இந்த இட ஒதுக்கீட்டினால் படிக்க இடம் கிடைத்தும் போதிய வசதி இல்லாததால் மருத்துவப் படிப்பைத் தொடர இயலவில்லை எனத் தெரிவித்தபோது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய முதலமைச்சருமானநமது முதலமைச்சர் அவர்கள், இதனைக் கனிவுடன் கேட்டு, அப்போதே அந்த மாணவியின் முழுக் கல்விச் செலவையும் தானே ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார்கள்.

பின்னர் தமிழ்நாடு முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் மருத்துவப் படிப்பு மட்டுமல்லாமல் பள்ளிப்படிப்பை முடித்து பொறியியல், விவசாயம், சட்டம் உள்ளிட்ட அனைத்துப் பட்டப் படிப்பிலும் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டினைக் கொண்டு வந்ததுடன், இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் உயர்கல்வியில் சேர்க்கை பெறும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், பேருந்துக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே ஏற்கும் என அறிவித்து, அதற் காகப் பொறியியல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு செயல்படுத்தியுள்ள ஒரு மிகப்பெரிய திட்டமாகும்.

போட்டித் தேர்வு பயிற்சி மையம்!

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இதுவரை 27 இலட்சம் மாணாக்கர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தற்போது முக்கிய நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் பெற்றுப் பணிபுரிந்து வருகின்றனர். புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் சுமார் 7 இலட்சம் மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். அதேபோல் இவ்வாண்டு தொடங்கப்பட்ட தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்ய துணை முதலமைச்சர் அவர்களால் போட்டித்தேர்வு பயிற்சி மையம் மதுரையில் தொடங்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் தொடங்கப்படவுள்ளது. இதனை மாணாக்கர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் உயர் கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை 47 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது. இந்தியாவின் உயர்கல்வி சதவீதம் 28 ஆக இருக்கிறது. 2030க்குள் 50 சதவீதம் இலக்கு எட்டவேண்டும் என்பது ஒன்றிய அரசின் நோக்கமாகும். ஆனால் தமிழ்நாடு இப்பொழுதே 47 சதவீதத்தைத் தாண்டிவிட்டது. உயர்கல்வியில், தொழில் உற்பத்தியில், தொழில் முன்னேற்றத்தில் உலக நாடுகளின் வளர்ச்சியைப் பற்றி அறிந்து, அந்த முன்னேறிய நாடுகளுக்கு இணையாக, முன்னேற்ற நிலையினை தமிழ்நாடு எட்ட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வித்துறைக்குப் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

மாணவர்களின் இடர்ப்பாடுகள் களையப்படும்!

ஆசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், கல்லூரிகளின் தாளாளர்கள், செயலாளர்கள், முதல்வர்கள் இந்தக் கலந்தாய்வுக்கு வருகைதந்து தங்களது அரிய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும். மேலும், உயர்கல்வி படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினைத் தருகின்ற தொழில் நிறுவனங்கள் சார்ந்த நிறுவனத் தலைவர்கள், மேலாண்மை இயக்குநர்கள், செயல் தலைவர்கள் எந்த மாதிரியான தகுதியுடைய மாணவர்களை எதிர்பார்க்கின்றார்கள் என்ற கருத்தையும் மாற்றுத்திறனாளி உயர்கல்வி மாணவர்கள் பெறுவதில் என்னென்ன இடர்ப்பாடுகள் இருக்கின்றன எனவும் கேட்டறியப்படவுள்ளது.

மேலும், மாணவர்களைப் படிக்கவைக்கும் அவர்களின் பெற்றோர்களை அழைத்து அவர்களிடமும் அவர்களின் கருத்துகளையும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் படிக்கின்ற அரசுப்பள்ளிகளில் படித்த கிராமப்புற மாணவர்களின் கருத்துகளையும், தமிழ்ப்புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் மாணவ மாணவியர்கள் என்னவிதமாகப் பயனடைந்துள்ளார்கள் என்பதையும், அவர்களின் கோரிக்கைகள் உள்ளிட்ட அனைத்துக் கருத்துகளையும் கேட்டறிந்து, அடுத்தடுத்த கட்ட மேல்நிலைக்கு உயர்கல்வித்துறையை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தில்தான் இன்று கருத்துகளைக் கேட்டறிய வந்துள்ளோம்.

ஆசிரியர் மற்றும் ஆசிரியரில்லாப் பணியாளர்கள் மற்றும் சுயநிதி மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி நிர்வாகத்தி னர் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் கிடைத்திடவும், காலிப்பணியிடங்களை நிரப்பிடவும், அரசுத் திட்டங்களை முறையாக மாணவர்களுக்கு கொண்டு செல்லவும் தங்களது கருத்துகளை வழங்கினர். தேவைக்கேற்ப ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

தொழில் நிறுவனங்களில் பிரதிநிதிகள் தங்கள் பகுதியில் உள்ள தொழிலுக்கு ஏற்ற திறன் பெற்ற பணியாளர்கள் தேவை உள்ளதாகவும், அவர்களுக்குத் தொழில் நிறு வனங்களுடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி அளிப்பது குறித்தும் தெரிவித்தனர். ஏற்கனவே திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தொழில் நிறுவனத்தனரிடம் சந்தித்து உரையாடி உள்ளோம். அவர்களும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். தாங்கள் தெரிவித்ததையும் கருத்தில் கொண்டு மாணவர்களுக்குத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கும் முறைகள் பரிசீலிக்கப்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பிற்பகலில் மாற்றுத்திறனாளி மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குக் முத்தமிழ் அறிஞர் கலைஞராலும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வரப்பட்ட பல்வேறு திட்டங் கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பிற்கு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன் மற்றும் 7.5% இடஒதுக்கீடு போன்றவற்றை வரவேற்றதுடன் மேற்படி திட்டங்களால் மாணவர்களுக்குக் கிடைக்கும் நிதியினை நேரடியாகக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்குவதால், தங்களுக்கு எவ்விதச் செலவும் இன்றித் தங்களது பிள்ளைகள் மேற்படிப்பைத் தொடர்வதற்கு உதவிய தமிழ்நாடு முதல்வருக்கு தங்களது நன்றிகளைச் செலுத்துவதாக தெரிவித்தனர். நான்முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை பெறுவதற்கு ஏழை எளிய மாணவர்களான தங்களுக்குப் போதுமான இணையதள வசதி, போன்ற வசதிகள் இல்லை எனவும் கல்லூரிகளிலும் இதற்கான முழுமையான செயல் திட்டங்களை வகுத்துத் தங்களுக்கு முழுமையாகப் பயன்பெறும் வகையில் செய்திட கோரிக்கை வைத்தினர். போதுமான வசதிகளைத் தேவைக்கு ஏற்பச் செய்துதர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

உயர்கல்வியில் தமிழ்நாடு முதலிடம்!

காலை, மாலை என இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இக்கூட்ட நேரடி கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் பயனுள்ளதாக அமைந்துள்ளன. இக்கருத்துகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, தேவைக்கேற்ப மாணவர்களுக்குப் பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்படும். திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடைபெற்றது போன்றே இன்றைய தினம் மதுரையில் இக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அடுத்து, சென்னை மண்டலத்தில் கலந்தாய்வுக் கூட்டம் நடத்திடத் திட்டமிடப் பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்களினால் தான் உயர் கல்வியில் இந்தியாவிலே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு கலை, அறிவியல், கல்வியியல், பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கான 202425 ஆம் ஆண்டு பணியிடமாறுதல் இணையவழியில் ஒளிவுமறைவு அற்ற பொதுக் கலந்தாய்வு நடத்த உத்தரவிடப்பட்டது. அதன்படி, ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட விண்ணப்பங்கள் வெளிப்படைத் தன்மையுடன் பரிசீலிக்கப்பட்டு தகுதியுடையவர்களுக்கு பணியிடமாறுதலுக்கான ஆணை மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

மேலும், பெற்றோர்களும், மாணவர்களும் கல்வி நிறுவனங்களை எளிதில் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற ஒவ்வொரு கல்வி நிறுவனங்களிலும் உதவி மையம் (*Help Desk*) அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அதன்படி, மதுரை ஸ்ரீ மீனாட்சி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட உதவி மையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு அரசின் அனைத்து திட்டங்களும் முழுமையாக மாணவிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போதைப் பொருள் எதிர்ப்புக் குழுக்கள்!

"போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்" என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அரசு. அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள் சார்ந்த அனைத்து கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளிலும், ஒவ்வொரு கல்லூரியிலும் குறைந்தபட்சம் நூறு மாணவர்கள் வீதம், ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட "போதைப்பொருள் எதிர்ப்புக் குழுக்கள்" உருவாக்கப்பட்டுள்ளன. பொதுமக்களிடமும் மாணவர்களிடமும் விழிப்புணர்வை இக்குழுக்கள் கொண்டு சேர்க்கும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், மதுரை மீனாட்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், போதைப்பொருள் எதிர்ப்புக் குழுவினர் நடத்திய "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" பற்றிய விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார். இப்பேரணியின் போது, பெருந்திரளான மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான புகார்களைக் கட்டணமில்லாத *Toll free* எண்களான 10581 மற்றும் 94984 10581 ஆகிய தொலைபேசி எண்களில் பொதுமக்கள் இது தொடர்பான புகார் தெரிவிக்கவும், உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், போதைப்பொருள் எதிர்ப்புப் பற்றிய விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களைப் பொதுமக்களிடம் வழங்கினர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் இந்திய அரசியலமைப்பின் முகப்புரையை தமிழில் வாசிக்க பேராசிரியர் பெருமக்கள், அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவியர்கள் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பம் மையத்தின் சார்பாக, நடமாடும் சிறு கோளரங்க காட்சி மற்றும் அறிவியல் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட பல்வேறு கருவிகளையும், கோளரங்க நிகழ்ச்சிகளையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியின் போது, உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் மருத்துவர். கே.கோபால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் டி.ஆப்ரகாம், மற்றும் கல்லூரி கல்வி ஆணையர் திருமதி.எ.சு ந்தரவல்லி, தமிழ்நாடு உயர் கல்வி மன்றத் துணைத் தலைவர் டாக்டர் எம்.பி. விஜயகுமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மா.சௌ.சங்கீதா, மீனாட்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.சூ. வானதி மற்றும் பேராசிரியர் பெருமக்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் , துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா தொடர் நிகழ்வாக 65 நிகழ்வுகள் நடைபெறுகிறது.அதன் முதல் நிகழ்வு நெல்லை டவுன் சந்திப் பிள்ளையார் கோவில் அருகில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 48 கிலோ கேக் வெட்டி மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் கொண்டாடினார். நிகழ்வில் நமச்சிவாயம், அப்துல் கையூம், அன்டன் செல்லதுரை, அருள் வில்சன் மணித்துரை, அலிஃப் மீரான், மூத்த முன்னோடி நாதன், ராஜா அப்பாஸ்,சௌந்தரம் முத்துராஜ், பத்மா, மேரி, பிந்து செய்யது, ராஜேஸ்வரி, ஆனி ரேக்லண்ட், நர்மதா திலக், கிருஷ்ணவேணி, சுப்புலட்சுமி, கவிதா, சித்ரா பௌர்ணமி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல்!

தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விருதுநகர் தெற்குமாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரா.அப்பணசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டைதெற்கு ஒன்றியம் மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, நவம்பர் 28 (வியாழக் கிழமை)அன்று ரூ.1000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

தகுதிவிவரம்

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்பு மனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ, ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்திபெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

தி.மு.க. விவசாய அணி

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணியின் அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட எஸ். சுந்தரபாண்டியன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **ஆர். சிவக்குமார்,** டிசிஇ., டிஏஇ., (ஒத்த வீடு, வி.லெட்சுமிபுரம், திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்) அவர்கள் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணியின் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட விவசாய அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26.11.2024

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் - காவேரிப்பட்டணம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம், காவேரிப்பட்டணம் பேரூர்ச் செயலாளர் ஜேகேஎஸ். பாபு சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **ஜேகேஎஸ். சாஜித்** (50, போதையநாயுடு, காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரிமாவட்டம்)அவர்கள்காவேரிப்பட்டணம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டபேரூர்க் கழக அமைப்பின் பிறநிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.